இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 05-07-2024

# யார் ஒட்டுண்ணி?

எதிர்க்கட்சிகள் கேட்ட எந்தக் கேள்விக்கும் பிரதமர் மோடியால் பதில் சொல்ல முடியவில்லை. அவரிடம் பதில் இல்லை. அதனால் என்ன செய்தார்? எதிர்க்கட்சிகளைப் பற்றி, இரண்டு மாத காலமாக தேர்தல் பரப்புரைகளில் என்ன சொன்னாரோ அதையே நாடாளுமன்றத்திலும் சொல்லி இருக்கிறார்.

“50 தொகுதிகளுக்காக மட்டுமே காங்கிரஸ் கட்சி போரிடுகிறது. அதற்கு மேல் ஒரு தொகுதியைக் கூட காங்கிரஸால் பிடிக்க முடியாது” என்று சொல்லி தன்னைத் தானே தேற்றிக் கொண்டு இருந்தார் மோடி. ஆனால் காங்கிரஸ் கட்சி 99 இடங்களைக் கைப்பற்றியது. ஒரு உறுப்பினர் அந்தக் கட்சியில் சேர்ந்ததால் 100 என்ற எண்ணிக்கையை அடைந்துவிட்டது காங்கிரஸ். அதனை மோடியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அந்த வேதனையை வெளிப்படுத்தும் உரையாகத்தான் அவரது பதிலுரை அமைந்திருக்கிறது.

“காங்கிரஸ் கட்சியை ஒட்டுண்ணி கட்சி” என்று சொல்லி இருக்கிறார் பிரதமர். நாடாளுமன்றத்தில் ஒரு பிரதமர் பேசும் பேச்சா இது? ஒட்டுண்ணி கட்சியாக காங்கிரஸ் மாறி கூட்டணிக் கட்சிகளை உறிஞ்சி அந்தக் கட்சி வென்று விட்டதாம். பிரதமர் சொல்கிறார். கூட்டணி அரசியலை இதை விட யாரும் கொச்சைப்படுத்த முடியாது.

**ஆட்சி அமைக்க பெரும்பான்மை என்பது 272 ஆகும். ஆனால் பா.ஜ.க.விடம் இப்போது இருப்பது 240 பேர்தான். மீதமுள்ளவர்களை இணைத்துக் கொண்டு பிரதமர் நாற்காலியில் உட்கார்ந்திருப்பதற்கு பெயர் தேசிய ஜனநாயகக் கூட்டணி அமைச்சரவையா? ஒட்டுண்ணி அமைச்சரவையா?**

சந்திரபாபு நாயுடுவை பா.ஜ.க. உறிஞ்சியதா? அல்லது அவர் பா.ஜ.க.வை உறிஞ்சினாரா? நிதிஷ்குமாரை பா.ஜ.க. உறிஞ்சியதா? அல்லது அவர் பா.ஜ.க.வை உறிஞ்சி வென்றாரா?

இந்தியாவின் சில மாநிலங்களில் பா.ஜ.க. ஆட்சி எத்தகைய ஒட்டுண்ணி ஆட்சி நடத்தி வருகிறது தெரியுமா?

பா.ஜ.க. ஒட்டுண்ணி அரசு நடத்தும் மாநிலங்கள்

1. ஆந்திரா - தெலுங்கு தேசம் ஆட்சி நடத்தி வருகிறது. இதற்கு பா.ஜ.க.வின் கூட்டணி ஆட்சி என்று பெயர்.
   தெலுங்கு தேசம் - 135
   பா.ஜ.க.வுக்கு - 8 எம்.எல்.ஏ.கள் தான் இருக்கிறார்கள்.
2. பீகார் - ஐக்கிய ஜனதா தளம் ஆட்சி நடத்துகிறது.
   ஐக்கிய ஜனதா தளம் - 47
   பா.ஜ.க. - 82
   டெல்லியில் அவரது தயவு வேண்டும் என்பதற்காக பீகாரில் விட்டுக் கொடுத்துள்ளார்கள். இல்லாவிட்டால் எப்போதோ கவிழ்த்திருப்பார்கள்.
3. மகாராஷ்டிரா - சிவசேனாவுடன் கூட்டணி ஆட்சி.
   சிவசேனா - 38
   பா.ஜ.க. - 103
   சிவசேனா தயவு டெல்லியில் தேவை என்பதற்காக அவர்களை டம்மி ஆட்சி நடத்த வைத்துள்ளார்கள்.
4. மேகாலயா - தேசிய மக்கள் கட்சி
   தேசிய மக்கள் கட்சி - 28
   பா.ஜ.க. - 2
5. நாகலாந்து - நாகலாந்து ஜனநாயக முற்போக்கு கட்சி
   நாகலாந்து ஜனநாயக முற்போக்கு கட்சி - 25
   பா.ஜ.க. - 12
6. புதுச்சேரி - என் ஆர் காங்கிரஸ்
   என் ஆர் காங்கிரஸ் - 10
   பா.ஜ.க. - 9
7. சிக்கிம் - சிக்கிம் க்ராட்டிகரி மோர்ச்சா
   சிக்கிம் க்ராட்டிகரி மோர்ச்சா - 31
   பா.ஜ.க. - 0

ஆனாலும் இங்கு பா.ஜ.க. கூட்டணி ஆட்சி நடப்பதாகத்தான் சொல்லப்படுகிறது. பா.ஜ.க. ஒட்டுண்ணியாக - இல்லை இல்லை மன்னிக்கவும் ‘கூட்டணியாக’ ஆளும் மாநிலங்கள் இவை.

ஒரே ஒரு மாநிலத்தில் என்னவெல்லாம் செய்தார்கள்?

மகாராஷ்டிராவில் உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவசேனா கட்சி ஆட்சியில் இருந்து வந்தது. அதில் குழப்பத்தை ஏற்படுத்தியது பா.ஜ.க. கணிசமான எம்.எல்.ஏ.க்கள் விலகினார்கள். சிவசேனா கட்சியில் இருந்த ஏக்நாத் ஷிண்டே தனக்கு ஆதரவாக உள்ள 40 எம்.எல்.ஏ.க்களைக் கொண்டு தனது தலைமையில் தனி அணியை உருவாக்கினார். இதனால், மகாவிகாஸ் அகாதி கூட்டணி அரசு கவிழ்ந்தது. இதையடுத்து, பா.ஜ.க. துணையுடன், ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான பா.ஜ.க. கூட்டணி அரசு பதவியேற்றது. இதையடுத்து சிவசேனா கட்சியை இரண்டாக உடைத்தார்கள். ‘நாங்கள் தான் உண்மையான சிவசேனா’ என முதல்வர் ஷிண்டே உரிமை கோரினார்.

முன்னாள் முதல்வர் உத்தவ் தாக்கரே, ஷிண்டே ஆகிய இரு தரப்பிலும் தேர்தல் ஆணையத்திடம் முறையிடப்பட்டது. இந்த விவகாரத்தை விசாரித்த தேர்தல் ஆணையம் உத்தவ் தாக்கரேயைவிட ஏக்நாத் ஷிண்டேவுக்கு அதிகமான எம்.எல்.ஏ.க்கள் மற்றும் எம்.பி.க்கள் ஆதரவு உள்ளதைக் காரணமாகக் காட்டி, சிவசேனா கட்சியும், வில் அம்பு சின்னமும் ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான அணிக்கே போய்ச் சேரும் என்று தீர்ப்பும் அளித்துவிட்டது. ஷிண்டேவை தங்களது தொங்கு சதையாக மாற்றி ‘ஒட்டுண்ணி’ அரசாங்கத்தை மராட்டியத்தில் நடத்தி வருகிறார்கள். இத்தகைய வரலாற்றை மக்கள் மறந்திருப்பார்கள் என்று நினைத்து பிரதமர் பேசிக் கொண்டு இருக்கிறார்.

தமிழ்நாட்டில் ஒரே ஒரு இடமாவது கிடைத்துவிடாதா என்ற நப்பாசையில் பா.ம.க.வை, பன்னீர்செல்வத்தை, தினகரனை, ஏ.சி.சண்முகத்தை, ஜான்பாண்டியனை உறிஞ்சிக் கொழுக்கப் பார்த்தார்களே? என்ன நடந்தது?

பா.ஜ.க. நிறுத்திய வேட்பாளர்களில் 116 பேர் மாற்றுக் கட்சிகளில் இருந்து வந்தவர்கள். அதாவது நான்கில் ஒருவர் வேறு கட்சியில் இருந்து வந்தவர். காங்கிரஸ் கட்சியில் இருந்து வந்த 37 பேருக்கு இடம் கொடுத்துள்ளார்கள். இவர்களில் எத்தனை பேர் வென்றார்கள் என்பது இருக்கட்டும். இவர்களை பா.ஜ.க.வுக்குள் இணைத்து உறிஞ்சப் பார்த்தது யார்?

பா.ஜ.க.வுக்கு எதிரான கட்சிகளை, தலைவர்களை வருமான வரித்துறை மூலமாகவும், அமலாக்கத்துறை மூலமாகவும் மிரட்டியதற்கு என்ன பெயர் வைக்கலாம்? அதனையும் பிரதமரே சொல்லட்டும். அவருக்கு தான் நன்றாக பெயர் வைக்கத் தெரிகிறது. இந்தியாவுக்கு சோறு வைக்கத் தான் அவருக்குத் தெரியாதே தவிர, பேரு வைப்பார்!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (4.7.2024) தலைமைச் செயலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினரும், மூத்த வழக்கறிஞருமான பி.வில்சன் தலைமையில், தமிழ்நாடு வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் எஸ்.பிரபாகரன், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வழக்கறிஞர்கள் சங்கக் கூட்டமைப்பின் தலைவர் என்.மாரப்பன், பொருளாளர் கே.முரளிபாபு, செயலாளர் பி.கார்த்திகேயன், மண்டல செயலாளர்கள் எஸ்.பாலமுருகன், டி.பழனிச்சாமி, கே.ரமேஷ், நாமக்கல் வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் ஆர்.அய்யாவு, வழக்கறிஞர்கள் கூட்டமைப்பு துணைத் தலைவர் எஸ்.கே.ஆடம், அம்பத்தூர் வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் ஏ.லட்சுமி ராஜ்ரத்தினம், விழுப்புரம் மாவட்ட குற்றவியல் வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் எம்.காளிதாஸ் ஆகியோர் சந்தித்து, ஒன்றிய அரசின் மூன்று புதிய குற்றவியல் சட்டங்களை எதிர்த்து ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதியமைக்காக நன்றி தெரிவித்தும், இப்புதிய சட்டங்களை இரத்து செய்ய வேண்டுமென ஒன்றிய அரசை வலியுறுத்துமாறும் கேட்டுக் கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (4.7.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத் தலைவர் பொன்குமார், வன்னியர் பொதுச் சொத்து நல வாரியத் தலைவர் மு.ஜெயராமன், அஞ்சலையம்மாள் பேத்திகள் திருமதி இளவரசி, செல்வி மங்கையர்க்கரசி, அஞ்சலையம்மாள் கொள்ளு பேத்தி திருமதி மாலதி மற்றும் அவரது கணவர் சுகுமார், அஞ்சலையம்மாள் கொள்ளு பேரன் கோகுல்ராஜ், சமூகநீதி சத்திரியர் பேரவை இணைப் பொதுச் செயலாளர் எஸ்.எம். குமார், மாநிலத் துணைத் தலைவர் அருள் அன்பரசு, கடலூர் மாவட்ட அமைப்பாளர் எஸ். சண்முகம், மாவட்டத் தலைவர் எஸ்.எஸ்.பி. சசிகுமார், அமைப்புச் செயலாளர் ப. மதியழகன், தமிழ்நாடு கட்டிடத் தொழிலாளர்கள் மத்திய சங்கத்தின் பொதுச் செயலாளர் வி. சுப்பராயலு ஆகியோர் சந்தித்து, சுதந்திரப் போராட்டத் தியாகி அஞ்சலை அம்மாள் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 1–ஆம் நாள் கடலூர் மாவட்டத்தில் அரசு விழாவாக கொண்டாடப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

### வேலூர் விமான நிலையம் - விரிவாக்கம் செய்யப்பட்ட நிலையில்

## மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுப்பீர்!

### மக்களவையில் டி.எம்.கதிர்ஆனந்த் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜூலை 5 -

நாடாளுமன்ற மக்களவையில் நேற்று முன்தினம் விதி எண் 377 கீழ் நடந்த விவாதத்தில் திமுகவைச் சேர்ந்த வேலூர் மக்களவை தொகுதி எம்.பி., டி.எம். கதிர் ஆனந்த் ஒன்றிய அரசின் உடான் திட்டத்தின் வாயிலாக விரிவாக் கப்பட்ட வேலூர் விமான நிலையம் மக்கள் பயன்பாட்டிற்கு உடனடியாக கொண்டு வர வலியுறுத்தினார். அவர் வைத்த கோரிக்கை விபரம் கீழ்வருமாறு...



எனது வேலூர் மக்களவைத் தொகுதி மக்களால் பெரிதும் எதிர்பார்க்கப் பட்ட வேலூர் விமான நிலையத் திட்டம் பல கோடி ரூபாய் செலவழித்தும் இன்னும் பயன்பாட்டுக்கு வழியின்றி நிலுவையில் உள்ளது. அது எப்போது நிறைவேறும்? என்பது தமிழக மக்களின் குறிப்பாக எனது வேலூர் மக்களவைத் தொகுதி மக்களின் மனதில் நீடித்து வரும் மிக முக்கியமான கேள்வி.

2017 இல், UDAN விமான பிராந்திய இணைப்புத் திட்டத்தின் கீழ் தற்போதுள்ள சிறிய விமான நிலையத்தை பெரிய விமான நிலையமாக விரிவுபடுத்தும் திட்டம் அறிவிக்கப்பட்டது.

இந்த விமான நிலைய விரிவாக்கத்திற்கு, 360 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப் பட்டு, பணிகள் முழுவீச்சில் துவங்கியது. ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட 700 மீட்டர் நீள ஓடுபாதை 850 மீட்டர் ஓடுபாதையாகப் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

வேலூர் தொகுதியில் உள்ள அனைத்து தரப்பு மக்களும் தங்கள் பல வருடங்களாக விமான நிலைய கனவு நிறைவேறும் என்று காத்திருக்கிறார்கள். ஆனால் சில விமானப் போக்குவரத்து துறை அதிகாரிகளின் அலட்சிய அணுகுமுறை காரணமாக நிலுவையில் உள்ள ஆய்வு பணிகள் நிறைவு பெறாமல் வேலூர் விமான நிலையம் இன்னும் மக்கள் பயன்பாட்டிற்கு வரவில்லை.

உடான் திட்டத்தின் கீழ் வேலூர் விமான நிலையத்தை விரைந்து முடிக்குமாறு சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சருக்கு கடிதம் வாயிலாகவும், நாடாளுமன்ற மக்களவையில் இது குறித்து கோரிக்கை எழுப்பியிருந்தேன்.

பிரதமர், நிதியமைச்சர் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அளித்த வாக்குறுதிகளை நியாயமான வகையில் நிறைவேற்றவும் வேலூர் விமான நிலையத்தை அமைப்பதற்கு டிஜிசிஏ மூலம் ஆய்வு செய்யவும் விரிவாக்கப்பட்ட வேலூர் விமான நிலையம் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர மத்திய அரசை மீண்டும் ஒரு முறை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு இன்று 18வது நாடாளுமன்ற மக்களவையில் நடந்த முதல் விவாதத்தில் தி.மு.க. நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர்

டி.எம். கதிர் ஆனந்த் இன்று விதி எண் 377 கீழ் வேலூர் விமான நிலைய விரிவாக்க பணிகள் விரைவாக நிறைவேற்றப்பட்டு வேலூர் விமான நிலையம் உடனடியாக மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர வலியுறுத்தினார்.

### ஒவ்வொரு மாதமும் அதிகபட்சமாக மின்னணு பண பரிவர்த்தனை மூலம்

## பயணச் சீட்டு வழங்கும் அரசு பேருந்து நடத்துநர்களுக்கு பரிசு!

சென்னை, ஜூலை 5 -

ஒவ்வொரு மாதமும் அதிகபட்சமாக மின்னணு பண பரிவர்த்தனை மூலம் பயணச் சீட்டு வழங்கும் நடத்துநர்களுக்கு பரிசு வழங்கப்படும் என்று தமிழ்நாடு போக்குவரத்துத் துறை அறிவித்துள்ளது.

அரசு விரைவு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் கடந்த ஏப்ரல் 1ம் தேதி முதல் மின்னணு பயணச் சீட்டு இயந்திரம் மூலம் பயணச்சீட்டு வழங்கப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக குறிப்பிட்ட பேருந்துகளில் அரசு விரைவு போக்குவரத்து கழகப் பேருந்துகளில் இந்த வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. கூகுள் பே, போன் பே போன்றவற்றின் மூலம் பணம் செலுத்தி பேருந்துகளில் பயணச் சீட்டு பெற்றுக்கொள்ளலாம்.

இந்நிலையில், பயணிகளிடம் டிஜிட்டல் பரிவர்த்தனையை ஊக்குவிக்கும் நடத்துநர்களுக்குப் பரிசு வழங்கப்படும் என அரசு விரைவு போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் சுற்றறிக்கை வெளியிட்டுள்ளார்.

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் ஆர்.மோகன், அனைத்து கிளை மேலாளர்கள் உள்ளிட்டோருக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:

அரசு விரைவுப் பேருந்துகளில் கடந்த ஏப்.1ம் தேதி முதல் மின்னணு பயணச் சீட்டு கருவி மூலம் பயணச் சீட்டு வழங்கப்பட்டு வருகிறது. இக்கருவியில் கிரெடிட் கார்டு, டெபிட் கார்டு, க்யூ ஆர் குறியீடு ஆகியவற்றின் மூலம் பணம் செலுத்தி பயணச்சீட்டு பெறுவதை ஊக்குவிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, ஒவ்வொரு மாதமும் இம்முறையில் அதிகபட்சமாக மின்னணு பணப்பரிவர்த்தனை மூலம் பயணச்சீட்டு வழங்கும் நடத்துநர்களுக்கு பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலையொட்டி முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி அமைச்சர், கழக தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில செயலாளர் டி.ஆர்.பி.ராஜா அறிவுறுத்தலின்படி காணை தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட பாக தகவல் தொழில்நுட்ப அணியின் நிர்வாகிகளின் உடனான ஆலோசனைக் கூட்டத்தில் இடைத் தேர்தல் பணிகள் குறித்து அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பல்வேறு ஆலோசனைகளையும் வழிகாட்டுதலையும் வழங்கினார். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் லட்சுமணன், மாநில துணை செயலாளர்கள் அழகிரி சதாசிவம், AK தருண், தமிழ் மாறன், N.K. சிவா, பத்மபிரியா, ஒன்றிய செயலாளர் கல்பட்டு. V.ராஜா மற்றும் மாவட்ட மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள், அணியின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.